தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - **2015**

**D021** இலக்கணம்-3 (பொருள்)

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. அகப்பொருள் இலக்கணம் கூறும் நூல்கள் இரண்டினை எழுதுக.
2. “யாமம்” என்னும் பெரும்பொழுது எத்திணைக்கு உரியது?
3. ‘களவு’ எண்வகை மணங்களில் எதனோடு ஒப்பிடப்படுகிறது?
4. இரவுக்குறியின் வகைகள் எத்தனை?
5. தோழி யாரிடம் அறத்தொடு நிற்பாள்?
6. வரைவு என்றால் என்ன?
7. கற்பில் கூற்றிற்கு உரியோர் இருவரைக் குறிப்பிடுக.
8. உரு உவமத்தினை ஒரு சான்று தந்து விளக்குக.
9. புறப்பொருள் வெண்பாமாலையின் முதல் நூல் யாது?
10. தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை கூறும் புறத்திணைகள் எத்தனை?
11. ‘எயிலை வளைத்து நிற்றல்’ என்பது எவ்வகைப் புறத்திணை?
12. காஞ்சித் திணையின் துறைகள் எத்தனை?
13. முன்தேர்க்குரவை – ஓரடியில் விளக்கம் தருக.
14. ‘பாடாண்’ – விளக்கம் தருக.
15. மூவேந்தரின் அடையாளப் பூக்களைக் குறிப்பிடுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. பொழுதின் வகைகளை விளக்கி எழுதுக.
2. இரவுக்குறியின் வகைகள் யாவை?
3. உடன்போக்கின் வகைகளை விளக்கியுரைக்க.
4. உள்ளுறை உவமத்தினைச் சான்று தந்து விளக்குக.
5. 'துடிநிலை' – இத்துறையின் இலக்கணத்தை எழுதுக.
6. 'உழுபுலவஞ்சி', 'மழபுலவஞ்சி' – துறைகளை விளக்குக.
7. ஆண்பால் கைக்கிளையின் நான்கு துறைகளை எழுதுக.
8. 'கண்படைநிலை', 'துயிலெடைநிலை' – விளக்குக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) நம்பியகப் பொருள் வரையறுக்கும் பதினான்கு வகைப் கருப் பொருட்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) எண்வகை மணங்களை விளக்கியுரைக்க.

2. (அ) கற்பிற்குரிய கிளவிகளை விரிவாக எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) காஞ்சிப் போருக்கு முந்தைய நிகழ்ச்சிகளை விவரித்துரைக்க.

3. (அ) நொச்சித்திணையையும் அதன் துறைகளையும் விரிவாக ஆராய்க.

(அல்லது)

(ஆ) 'பெருந்திணை' குறித்து நும்பாடப்பகுதி வழி விரிவாக எழுதுக.

✱✱✱